## ரிதிகம பிரதேச சபை
## குருணாகல் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ரிதிகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 40,000 பெறுமதியான நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதுடன் அடுத்த ஆண்டில் அதை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 12 வகையான இருப்புப் பொருட்களின் பெறுமதி ரூபா. 61,995 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தொகைகளை கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா. 61,995 பெறுமதியான உபகரணங்கள் எதிர்வரும் ஆண்டு கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் 05 ஆதனங்கள், பொறிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா. 1,761,436 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதனச் செலவுகளை மூலதனமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதுடன் அடுத்த ஆண்டில் அதை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,323,623 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,066,405 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i. | வீதவரியும் வரியும் | 4,609 | 4,729 | 5,126 | 2,243 | 4,224 | 4,734 | 4,615 | 2,639 |
| ii. | வாடகை | 9,880 | 6,939 | 6,981 | 286 | 8,030 | 13,445 | 13,670 | 328 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,658 | 1,063 | 1,102 | 8 | 1,933 | 1,207 | 35,956 | 47 |
| iv. | ஏனைய வருமானம் | 27,956 | 82,459 | 80,566 | 24,990 | 27,350 | 75,406 | 55,472 | 23,852 |
| | மொத்தம் | 44,103 | 95,190 | 93,775 | 27,527 | 41,537 | 94,792 | 109,713 | 26,866 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பிரதான அலுவலகத்தின் 09 வீதவரிப் பிரிவுகளிலிருந்தும் 02 உப அலுவலகங்களிலிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா. 2,004,304 வீதவரி நிலுவையாக இருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் விதிகளுக்கமைவாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச சபைச் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அமைவாக வருமானம் ஈட்டுவதற்காக 2019 ஆம் ஆண்டினுள் சொத்துக்களை தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் 07 உம் வருமானம் சேகரிக்கும் நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள் 04 உம் நடாத்தப்பட்டதென்பதை கணக்காய்விற்கு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடத்தின் ஆரம்பத்தில் நிலுவை வாடகை ரூபா. 328,259 ஆகக் காணப்பட்ட போதும் வருடத்தினுள் அதில் ரூபா. 44,630 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திண்மக் கழிவு முகாமை நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவு ரூபா. 312,000 மற்றும் மீண்டெழும் செலவு ரூபா. 9,723,058 செலவிடப்பட்டிருந்தது. கழிவுகளை புதைப்பதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த தனியார் நிலத்தில் உக்கலடையாத கழிவுகள் சுமார் 65.2 தொன் கொட்டப்பட்டிருந்தது. | திண்மக் கழிவு முகாமை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கழிவுகள் இறுதியாக அகற்றுவதற்கு பொருத்தமான இடமொன்று சபையிடம் இல்லாமை காரணமாக மக்களுக்கான இடைஞ்சல் மற்றும் சுற்றாடலுக்கான பாதிப்பு குறைந்த அதற்கான பொருத்தமான இடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா. 156,191 செலவிடப்பட்டுள்ள தென்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். |
| (ii) | 214.9 தொன் உக்கலடையக்கூடிய கழிவுகளைப் பயன்படுத்தி 30,925 கிலோ அசேதன உரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதில் வருடத்தினுள் | வருடத்தின் உற்பத்திகளை பொதி செய்து விற்பனையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது வருடத்தினுள் உற்பத்தி செய்யப்பட்டு பிரிகை செய்து பொதி செய்யப்படாத ஒரு தொகையாக இருப்பதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை செய்யப்பட்ட அசேதன உரத்தின் அளவு 2,105 கிலோவாகக் காணப்பட்டது. | | இதில் பொதி செய்யப்பட்ட 2,105 கிலோ உரம் விற்பளை செய்யப்பட்டுள்ளது. விற்பனையை அதிகரித்துக்கொள்வதற்காக பிரதேசத்தின் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டு வருகின்றன. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 16 ஆம் திகதிய 2098 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமாணியின் பிரகாரம் 2019ஆம் ஆண்டுக்கான இசை நிகழ்ச்சிகள் மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகளுக்காக சபையின் விளையாட்டரங்கை வழங்கும் போது உரிய கட்டணங்களைப் பெற வேண்டியிருந்த போதும், 2019 மார்ச் மாதத்தில் 05 நாட்களாக நடைபெற்ற ரிதீ மேலா இசைக் களியாட்டத்திற்காக தொடம்கஸ்லந்தை பொது விளையாட்டரங்கு ரூபா. 61,426 தொகை அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்தது. | கட்டணம் அறவிடப்பட்டு நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்காக விளையாட்டரங்கு வழங்கப்படும் போது வர்த்தமானியின் பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2019 மார்ச் 27, 28, 29, 30 மற்றும் 31 ஆகிய தினங்களில் நடைபெற்ற ரிதீ மேலா இசைக் களியாட்டத்திற்காக தொடம்கஸ்லந்தை பொது விளையாட்டரங்கினை இலவசமாக வழங்குவதற்கான காரணம் களியாட்ட நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்த தொடம்கஸ்லந்தை சக்தி முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் மூலம் பொதுமக்களின் சமூக மற்றும் ஆத்மீக அபிவிருத்தியினை இலக்காகக் கொண்ட பல்வேறு சமூக நலப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதனாலாகும். |
| (ஆ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதி பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருடம் அல்லது அதற்கும் கூடிய காலம் கடந்திருந்த ரூபா. 3,934,130 மீதிகள் காணப்பட்டன. 2020 மே 30 ஆம் திகதியாகும் பொழுது இதில் ரூபா. 3,543,241 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | மேலும் அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏதிர்காலத்தில் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடமாடும் நிகழ்ச்சிகளை நடாத்தி குறித்த நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்வதற்கும் வாடகை வருமானங்களை திரட்டிக்கொள்வதற்காக 03 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கணக்காய்விற்கு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேலான காலத்திற்குரிய ரூபா. 14,167,033 தொகை காணப்பட்டது. 2020 மே 20 ஆம் திகதி வரை 2019 திசெம்பர் 31 இல் காணப்பட்ட மீதியில் மேலும் ரூபா. 27,010,654 தீர்க்க வேண்டியிருந்தது. | மேலும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020.05.30 ஆம் திகதி வரை ரூபா. 27,010,654 வரை குறைவடைந்துள்ளது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் பற்றாக்குறை மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைப் பதவிகளில் 16 வெற்றிடங்களும் இரண்டாம் நிலைப் பதவிகளில் 03 மேலதிகங்களும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 05 ஊழியர்களும் காணப்பட்டனர். | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மேலதிகங்களை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 07 ஆக உள்ளதுடன் உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 20 ஆகும். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களும் நிலையான ஆளணியினரில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஆளணியினர் எண்ணிக்கை 108 ஆக காணப்பட்டது. அதேபோன்று ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட 05 பேருடன் ஆளணியினர் எண்ணிக்கை 113 ஆகக் காட்டப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையினால் கணக்கிடப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற எனினும் கையேற்கப்படாத ரூபா. 12,420,000 பெறுமதியான 11 சொத்துக்கள் காணப்பட்டன. | பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை தீர்த்து சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் காணி தொடர்பான மதிப்பீடுகளை நடாத்தி அக் காணிகளுக்கான உறுதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக கணக்காய்விற்கு தயவுடன் தெரிவிக்கின்றேன். |

## 3.5 இனங்காணப்படாத நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 03 நூலகங்களில் காணாமல் போயிருந்த ரூபா. 50,724 பெறுமதியான 398 புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஹேவாவிஸ்ஸ, ரம்படகல்ல மற்றும் தொடங்கஸ்லந்தை ஆகிய பொது நூலகங்களில் 2019.12.31 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டின் பிரகாரம் காணாமல் போயிருந்த 398 புத்தகங்கள் தொடர்பில் அவற்றின் பெறுமதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |